பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 05 வெள்ளிக்கிழமை 21.08.2020 கதிர் 285

**இது ரகசியம் அல்ல!**

புதிய அரசின் மிக வலிதான பெரும்பான்மை குறித்துப் பல தரப்பினரும் குறிப்பிடும் ஒரு விடயத்தைத் தமது நாடாளுமன்றக் கன்னி உரையில் மேற்கோள் காட்டி, ஒரு கடுமையான எச்சரிக்கையை ராஜபக்ஷக்களுக்குக் கொடுத்திருக்கின்றார் பக்கம்02 »

# ‘19’ ஐ நீக்குவதற்கே எமக்கு மக்கள் ஆணை வழங்கினர்!

## அதனைச் செய்த பின்னரே புதிய அரசமைப்பு சபையில் நேற்று அறிவித்தார் கோட்டாபய

கொழும்பு, ஓகஸ்ட் 21

அரசமைப்பில் மாற்றத்தைச் செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசமைப்பொன்றை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்போம். இதன்போது இந்த நாட்டின் அனைத்து மக்கள் சம்பந்தமாகவும் ‘ஒரே நாடு – ஒரே சட்டம்’ என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

– இப்படித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

09ஆவது நாடாளுமன்ற அமர்வை நேற்று ஆரம்பித்துவைத்து அக்கிராசன உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

(ஜனாதிபதியின் உரையின் முழு விவரம் 6,7 ஆம் பக்கங்களில்)



## தேசிய விளையாட்டுப் பேரவை தலைவராக மஹேல ஜயவர்தன

கொழும்பு, ஓக. 21

தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மஹேல ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இந்த நியமனத்தை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, இராணுவத்தளபதி சவேந்திர சில்வா, ஜூலியன் போலிங், திலந்த மலகமுவ, கஸ்தூரி செல்வராஜா வில்சன், சுபுன் வீரசிங்க, ரொஹான் பெர்னாண்டோ, ருவன் கேரகல, சஞ்சீவ விக்ரமநாயக்க, மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹட்டி, ரொவேனா சமரசிங்க, யஸ்வந்த் முத்தெட்டுவேகம, எதிரிசூரிய மற்றும் தியுமி அபேசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பேச்சாளர் பதவி குறித்து நேற்று மூச்சே விடாத ரெலோ, புளொட்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்ற அமர்வுகளுக்கு இடையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் பதவியை அதன் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் தமது தரப்புக்கு வழங்குமாறு கோருவர் என முன்னர் தகவல்கள் வெளியாகிப் பெரும் எதிர்பார்ப்பு இருந்த போதும் நேற்று அப்படி எதுவுமே நடக்கவில்லை.

நேற்றைய கூட்டத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனோ, பக்கம் 02 »

## ஊடகவியலாளர்களுக்கு கடற்படை அச்சுறுத்தல்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 21

கடற்படையினருக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கும் அங்கு நின்றிருந்த பக்கம் 02 »

## மயிலிட்டியில் கைக்குண்டுகள் நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 21

மயிலிட்டிப் பகுதியில் வெற்றுக் காணிக்குள் பக்கம் 02 »

## எதிர்க்கட்சி கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஓக. 21

எதிர்க் கட்சியின் கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் நேற்று வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே, லக்ஷ்மன் கிரியெல்ல எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

## புதிய அரசமைப்பு; சிறிபால டி சில்வா தலைமையில் குழு

கொழும்பு, ஓக. 21

புதிய அரசமைப்பு தொடர்பான திட்டங்களை முன்வைப்பதற்காக பக்கம் 02 »

## ஜனாதிபதி ஆற்றிய உரையின் மீது நாடாளுமன்றில் இன்று விவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் ஆற்றிய கொள்கைவிளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடைபெறவுள்ளது.

புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், எதிரணி உறுப்பினர்களுக்கு விவாதத்தில் உரையாற்றுவதற்கு 40 வீத நேர ஒதுக்கீடே வழங்கப்பட்டுள்ளது என்ற அதிருப்திக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

## கோண்டாவிலில் இராணுவம் நேற்றுத் திடீர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

கோண்டாவில் பகுதியில் நேற்று இராணுவத்தினர் திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கோண்டாவில் மேற்குப் பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கோண்டாவிலில் அனைத்து வீதிகளிலும் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் பிரிவினர் மற்றும் ஏராளமான ராணுவத்தினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

*"இப்படித்தான் – உங்களைப் போலத் தான் – 1977இல் மிகப் பெரும் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. அவரது ஆட்சியில் தான் மிக மோசமான 1983 கலவரம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. இப்போது அந்தக் கட்சி நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்துடன் குறுகிச் சீரழிந்து போய் நிற்கின்றது."* – என்ற சாரப்பட உரையாற்றினார் விக்னேஸ்வரன்.

இந்தப் பேச்சுக்கு அனேக அர்த்தங்கள். ராஜபக்ஷக்களுக்கு அவை புரிந்தால் நல்லது. புரியுமோ தெரியவில்லை.

"ஜெயவர்த்தனா போல 'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' – என்று துள்ளிக் குதிப்பீர்களானால் கடைசியாக அவரின் கட்சிக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும்...!

"அன்று ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நாடாளுமன்றுக்குச் சென்றவர்கள் இன்று ஆக ஒரேயொரு ஆசனத்துடன் காணாமல் போகும் நிலைமை. இன்று அதேபோன்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மீளவும் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றீர்கள். ஜெயவர்த்தனவின் கட்சிக்கு ஏற்பட்ட கதியை உணர்ந்து நடவுங்கள்...!

"அவரும் (ஜெயவர்த்தனவும்) கிடைத்த பெரும்பான்மையை வைத்துத் தம்மிஷ்டப்படி – தமக்கேற்றபடி – அரசமைப்பை மாற்றினார். இப்போது அவரது கட்சி அதன் விளைவை அனுபவிக்கின்றது.

"நீங்களும் (ராஜபக்ஷக்களும்) உங்களுக்குக் கிடைத்த பெரும்பான்மையை வைத்து உங்கள் விருப்பப்படி அரசமைப்பை மாற்ற முயல்கின்றீர்கள். ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடமிருந்து பாடம் படித்துக் கொள்ளுங்கள்."

– இவை நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்றைய தமது உரையில் சொல்லாமல் சொல்லியவை.

ராஜபக்ஷக்களுக்கு இது புரிந்திருந்தால் நல்லது. புரிந்திருக்குமோ என்னவோ...?

★ ★ ★

ஆளும் கட்சிக்குள் தொடங்கியது உள்வீட்டுத் துவந்த யுத்தம்.

ஆரம்பம் இம்முறை வடக்கில்.

பொதுஜன பெரமுன அரசில் வடக்கில் இருந்து இரண்டு முக்கியஸ்தர்கள்.

ஒருவர் – ஈ.பி.டி.பி. சார்பில் போட்டியிட்டு அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா. மற்றவர் – சு.கவில் போட்டியிட்டு குழுக்களின் பிரதித் தலைவரான அங்கஜன் இராமநாதன். அவரே வடக்கு ஆளுநருடன் சேர்ந்து, யாழ்.மாவட்டத்துக்கான இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்.

ஆளுநர் தரப்பில் இருக்கும் – ஆளும் தரப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் – இரண்டு வடக்குப் பிரமுகர்களுக்கு இடையில் ஆரம்பித்தது இழுபறிப் போராட்டம். நடந்தது இதுதான்:–

யாழ்ப்பாணம் மாவட்டம், ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2019ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 'ஆரோ பிளான்ட்' குடிதண்ணீர்த் திட்டம் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிக்கும்படி அரசிடம் நீண்ட காலமாக அழுத்தம் கொடுத்து வந்தவர் என்ற முறையிலும், தாம் இப்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற முறையிலும் இந்தத் திட்டத்தைத் தாமே ஆரம்பித்து வைக்க வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் விரும்பினார். அதற்கான ஏற்பாடுகள் நடந்தன. இன்றைய தினம் ஆரம்ப விழா நடக்கும், அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பார் என்றெல்லாம் பேச்சடிபட்டது. ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்தன.

ஆனால், விடயம் அங்கஜன் தரப்பிற்கு மணத்து விட்டது. அவ்வளவுதான்.

'யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் தான் கட்டளையிடுகிறேன், எனது பிரதிநிதியாக எனது இணைப்பாளர் வருகின்றார். அவரை வைத்துத் திட்டத்தை உடனேயே ஆரம்பித்து வையுங்கள்' என்று மாவட்டச் செயலாளருக்கு அங்கஜன் தரப்பிடம் இருக்க உத்தரவுக் கடிதம் பறந்தது.

ஒருங்கிணைப்புக்குழுக் தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பியின் மேற்படி இணைப்பாளர் யார் தெரியுமா? அவரது தந்தையார் சதாசிவம் இராமநாதன்தான்.

பிறகென்ன? இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருந்த மெலிஞ்சிமுனை குடிதண்ணீர் திட்டம் நேற்றே சதாசிவம் இராமநாதனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு விட்டது.

இந்தத் திட்டத்துக்கு அடிக்கல் நட்டவர் அங்கஜன் இராமநாதன் என்ற முறையில் அவர் தரப்புத்தான் இதனை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்பது அங்கஜன் தரப்பின் வாதம்.

அது சரியோ, பிழையோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

ஆனால், இது ஆரம்பம். மட்டும்தான். இத்தகைய திருக்கூத்துக்கள் பல இனித் தொடரும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வளவுதான்...!

–மின்னல்–

## ஊடகவியலாளர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியயலாளர்களுக்கும் கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மாதகல் துறையில் மக்களுக்குச் சொந்தமான காணியைக் கடற்படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் நேற்று நில அளவைத் திணைக்களத்தினரால் காணி அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர்களும் அந்தப் பகுதி மக்களும் அரசியல்வாதிகளும் அங்கு ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது அங்கு பெருமளவிலான கடற்படையினர் மற்றும் பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்களையும் அங்கிருந்து துரத்தும் செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.

ஆயினும் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டால் மாத்திரமே தாம் அங்கிருந்து விலகுவோம் என மக்கள் தெரிவித்து அங்கு நின்றிருந்தனர்.

இதன்போது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமக்களையும் அரசியல் பிரமுகர்களையும் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் புகைப்படங்களையும் காணொலிகளையும் எடுத்தனர்.

பொது மக்களின் கடும் எதிர்ப்பையடுத்து கடற்படையினருக்கு காணிகளைச் சுவீகரிப்பதற்கான காணிகளை அளவீடு செய்யாமலே நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

## மயிலிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து 6 கைக்குண்டுகள் உட்பட வெடிபொருள்கள் நேற்று பலாலிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மயிலிட்டிப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்குள் வெடிபொருள்கள் இருப்பதை அப்பகுதி மக்கள் கண்டுள்ளனர்.

உடனடியாக அப்பகுதி கிராம சேவையாளருக்கு தகவலை வழங்கியுள்ளனர். கிராமசேவகர் பலாலி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## புதிய அரசமைப்பு:...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் குழு ஒன்றை நியமிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பை ஜனாதிபதி நேற்று வெளியிட்டமையை அடுத்தே இந்தக்குழு அமைக்கப்பட்டது.

# மகாவலி வனப் பகுதியில் புதனன்று திடீர் தீப்பரவல்



தலவத்துஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகாவலி வனப்பகுதியில் நேற்று முன்தினன் புதன்கிழமை மாலை திடீர் தீப்பரவல் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பிரதேசவாசிகளுடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீப்பரவலால் எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. எனினும், 5 ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளதெனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. தீக்கான காரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பூசா சிறைச்சாலையில் கைதி ஒருவர் தூக்கில்



பூசா சிறைச்சாலையின் விடுதி ஏ பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

அந்தக் கைதி கராபிட்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக இரத்கம பொலிசார் தெரிவித்தனர்.

இறந்தவர் 54 வயது கைதி எனவும், அவர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைதி களுத்துறை சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக 3 ஆம் திகதி பூசா சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சடலம் காலியில் உள்ள கராபிட்டி போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் நிலைமை தொடர்ந்தும் கவலைக்கிடம்



பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாக உள்ளது என மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி.பிக்குச் சிகிச்சை அளித்துவரும் சென்னை தனியார் மருத்துவமனை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

கடந்த ஒகஸ்ட் 5ஆம் திகதி கொரோனா வைரஸ் நோய் அறிகுறி காரணமாக அனுமதிக்கப்பட்ட எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள் குழுவின் அறிவுரைகளின்படி அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது உயிர்காக்கும் கருவிகளுடன் இருந்து வரும் அவரது உடல் நிலை ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

தற்போது தேசிய மற்றும் சர்வதேச மருத்துவ நிபுணர்களின் தீவிர சிகிச்சைக் கண்காணிப்பில் அவர் இருந்து வருகிறார் என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பேச்சாளர் பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புளொட் தலைவர் சித்தார்த்தனோ கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி குறித்து வாயே திறக்கவில்லை என்று தெரியவந்தது.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியைத் தமது தரப்புக்கு வழங்கவேண்டும் என இந்த இரு கட்சிகளும் கோரியிருந்தன.

இந்த விடயம் நேற்றைய கூட்டத்தில் பெரும் பேசுபொருளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அந்த எதிர்பார்ப்பு பொய்யாகியது.

நேற்று நடந்த 9ஆவது நாடாளுமன்றக் கன்னி அமர்வின் இடைவேளை நேரத்தில் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தவிர்ந்த 9 பேரும் பங்கு கொண்டிருந்தனர். கூட்டம் நிறைவு பெறும் வேளையில் சித்தார்த்தனும் அங்கு வந்து சேர்ந்து கொண்டார்.

நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பல விடயங்கள், கட்சியின் எதிர்காலப் பணிகள் தொடர்பில் உரையாடப்பட்ட போதும் பேச்சாளர் விடயம் தொடர்பில் எதுவுமே பேசப்படவில்லை என்று தெரிய வந்தது.

எனவே, இதுவரை நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் பதவியை வைத்திருக்கும் சுமந்திரன் அப்பதவியில் தொடர்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir



# நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக எம் தலைவர்கள் இன்று எத்தகைய ஏமாற்று வேலைகளையும் செய்வார்கள்

## மணிவண்ணன் நேற்று சாட்டை சிவமகாராசா நினைவுரையில்

தெல்லிப்பளை,ஓக.21

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காக எத்தகைய ஏமாற்று வேலைகளையும் செய்யக்கூடியவர்கள்தான் இன்று எமது தலைவர்களாகவுள்ளார்கள். இவர்கள்தானா கொள்கை, உரிமைக்கா போராடப் போகிறார்கள் என சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கூட்டுறவாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நினைவு தினம் நேற்று தெல்லிப்பளை கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெல்லிப்பழை என்று சொல்லும் போது முதலில் துர்க்கை அம்மன் ஆலயமும் தெல்லிப்பழை வைத்தியசாலையும் நினைவிற்கு வரும். மனிதர்கள்



என்று கூறும் போது மாமனிதர் சிவமகாராசா மற்றும் தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் நினைவில் வருவார்கள். இவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்தவர்கள்.

மாமனிதர் சிவமகாராசா மக்களின் கொள்கை இலட்சியத்திற்காக இறுதி வரை உழைத்தவர். கூட்டுறவாளராக, நாடாளுமன்ற உறுப்பினராக, நமது ஈழநாடு பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளராக என பல துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தியவர். இவர் முதல் முறையாக நாடாளுமன்றம் தெரிவானபோது மக்களின் விடுதலைக்காக தனி நாடு கேட்டு போராடவேண்டும் என்றால் 6 ஆவது திருத்த சட்டத்தின்கீழ் சத்தியம் செய்து போராடமுடியாது என்பதற்காகத் தனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தவர்.

இதன் மூலம் தனது கொள்கை, இலட்சியம் என்பவற்றில் எத்தகைய உறுதியுடன் இருந்தார் என்பது உறுதியாகின்றது. அதன்பின்னர் போட்டியிட்ட போது மக்கள் தெரிவு கிடைக்கவில்லை. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். தெடர்ந்தும் மக்களுக்காகவே சேவை செய்தார். அதனாலேயே அவரது உயிரும் பறிக்கப்பட்டது.

மாமனிதர் சிவமகாராசா தனது கொள்கையில் உறுதியுடன் இருந்தமையால் தான் தனது முதல் தெரிவின் போது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெறவில்லை. ஆனால் இன்றுள்ள எமது தலைவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக ஏமாற்றுவேலை செய்யக்கூடிய நிலையே உள்ளனர்.

மக்களின் உரிமை, தேசியம், கொள்கைக்காக போராடுபவர்கள் அதே கொள்கைக்காக போராடி எம்மை விட்டு பிரிந்தவர்களையும் நினைவு கூரவேண்டும். அவ்வாறு செய்வதே நாம் அவர்களுக்கு செய்யும் நன்றிகடனில் ஒன்றாகும். இன்றைய நினைவு நாளில் எத்தனை பேர் கலந்து கொண்டு மாமனிதரை நினைவு கூறுகின்றோம்? - என்றார்

## கொடிகாமத்தில் விபத்து



யாழ்.கொடிகாமம் சந்தியில் பாதசாரி கடவைஊடாகவீதியை கடக்க முயன்றவர் மீது பஸ் மோதியதில் படுகாயமடைந்தஅவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தியத்தலாவ சென்ற தனியார் பஸ்ஸே விபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

## சுவிஸிலிருந்து திருப்பி அனுப்புவதை ஆட்சேபித்து அங்கு 31 இல் பேரணி!

### பாதிப்புற்ற ஈழத் தமிழர்கள் ஏற்பாடு

புலம்பெயர்ந்து சுவிட்ஸர்லாந்தில் வசித்துவரும் ஈழத்தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை நிறுத்தவேண்டும் என்று கோரி எதிர்வரும் 31 ஆம் திகதி அமைதி ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளது.

சுவிட்ஸர்லாந்தின் தலைநகர் பேர்ன் Waisenhausplatz இலுள்ள சிவநெறிகூடத்தில் இருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி மாலை 2 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாக இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்றன எனவும், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் தமிழர்கள் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்படுகின்றனர் எனவும் தெரிவித்த ஏற்பாட்டாளர்கள், சுவிட்ஸர்லாந்தில் அகதி தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களை எக்காரணம் கொண்டும் சுவிஸ் அரசாங்கம் திருப்பி அனுப்பக்கூடாது என்று கோரி இந்த இந்த ஊர்வலத்தை மேற்கொள்ள இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்கள்.

## ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு காலக் காட்சிகள்











## குஞ்சுக்குளத்தில் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன



வவுனியா, கனகராயன்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருள்கள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் உள்ள காணி ஒன்றினை புனரமைப்பு செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வந்தநிலையில் நிலத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு கனகராயன்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிபடையினர் வெடிக்காத நிலையில் காணப்பட்ட 8 மோட்டார் ெல்களை மீட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுடன் இந்த வெடிபொருள்கள் செயலிழக்கச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடைகள் வாடகைக்கு தேவை

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகர்ப் பகுதிகளில் கடைகள் வாடகைக்கு தேவை

தொடர்புகளுக்கு - 076 740 3814

நிரந்தர வேலைவாய்ப்பு

வட பகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவனமான NFlash Super Detergent புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய நபர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத் தேர்வு 10முதல் A/L வரை மூன்று மாத பயிற்சியின் போது15000 வருமானம் பயிற்சியின் பின் 40000/= மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

மேலதிக சேவைகள் - EPF, ETF, Medical, ஆங்கிலம் சிங்களம் கற்பதற்கான வசதி பதவி வெற்றிடங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

607a, KKS Road, Jaffna

தொடர்புகளுக்கு - 021 222 2855, 0775521626

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதேச்சதிகாரம் கட்டவிழலாம்

'முதற் கோணல் முற்றிலும் கோணல்' என்பார்கள்.

புதிய நாடாளுமன்றக் கட்டமைவு தொடர்பாகவும் செயற்பாடுகள் தொடர்பாகவும் நேற்றுப் புதிய சபாநாயர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களும், நீண்ட வாதப் பிரதிவாத சர்ச்சைகளும், எட்டப்பட்ட முடிவுகளும் அதனையே எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

அளவுக்கு மிஞ்சிய பெரும்பான்மையை ஆளும் தரப்புக் கொண்டிருக்கும் இந்த நாடாளுமன்றத்தில் அதன் செயற்பாடுகளும் ஒரு பக்கச்சார்பானவையாகவே அமையப் போகின்றன என்பதற்குக் கட்டியம் கூறுவது போல நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத் தீர்மானங்கள் அமைந்துள்ளன.

நாடாளுமன்றத்தில் விடயங்கள், விவகாரங்கள் மீதான உரைக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் பொதுவான ஜனநாயக நியமங்கள் உண்டு.

ஆளும் தரப்பு தமது பக்கக் கருத்தை முன்வைப்பதற்கு நாற்பது வீத நேரமும் எதிர்க்கட்சிகள் ஆளும் தரப்பு மீதான விமர்சனங்களை முன்வைத்து விடயங்களை அம்பலப்படுத்தி, நேர்சீராக்குவதற்கு வசதியாக அறுபது வீத நேரமும் ஒதுக்கப்படுவது வழமை. இதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் நியம நேர அளவீடு. ஜனநாயகப் பாரம்பரியம் அதுதான்.

ஆனால் அந்த வழமையை அனுமதிக்க - விட்டுக் கொடுக்க - நேற்று பொதுஜன பெரமுன அரசு இணங்கவில்லை.

எண்ணிக்கையின் அடிப்படையில் தாங்கள் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களை வைத்திருப்பதாலும் -

தங்களின் கூட்டில் பல கட்சிகள் இடம்பெற்றிருக்கின்றமையால் அவை எல்லாவற்றுக்கும் பேசுவதற்கு நேர ஒதுக்கீடு செய்ய வேண்டிய இக்கட்டு ஆளும் கட்சித் தரப்புக்கு இருப்பதாலும் -

ஆளும் தரப்புக்கான நேர ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது ஆளும் தரப்பு.

எதிரணி அதனை ஆட்சேபித்தது. நாடாளுமன்ற வழக்காறுகள், சம்பிரதாயங்கள், மரபுக்களின் படி எதிரணிக்குத்தான் அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அதனைக் கடைப்பிடியுங்கள் என்று ஆளும் தரப்பையும் சபாநாயகரையும் வற்புறுத்தின எதிர்க்கட்சிகள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக - கட்சித் தலைவர்களினது கூட்டத்தில் பங்கு பற்றிய சுமந்திரன், மிகப் பெரிய பலமான நிலையில் ஆளும் தரப்பு நாடாளுமன்றத்தில் இருப்பதால்தான், எதிரணிக்கு வழமைப்படி அதிக நேரம் ஒதுக்க வேண்டியது அவசியமானது என்று வற்புறுத்தினார்.

இந்த இரண்டு தரப்பு வாதங்களை அடுத்து, நேர ஒதுக்கீட்டு விடயத்தில் ஆளும் தரப்பு - எதிரணி இரண்டுக்கும் சரிசமமாக நேரத்தைப் பங்கிட்டு வழங்கவும் -

ஜனாதிபதியின் உரை மீதான இன்றைய விவாதத்தில் ஆளும் தரப்புக்கு அறுபது வீத நேரத்தையும், எதிரணிக்கு நாற்பது வீத நேரத்தையும் ஒதுக்கீடு செய்யவும் -

சபாநாயகர் முடிவெடுத்து - அதனை ஒரு சமரசத்திட்டமாக முன்வைத்தார்.

எனினும், எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அதனை ஆட்சேபித்தனர்.

ஜனாதிபதியின் தரப்புத்தான் ஆளும் கட்சியாக உள்ளது. அவரது உரையின் மீது அதிக விடயங்களைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் எதிர்க்கட்சிகளுக்கே உள்ளன. ஆனால் அதனை மீறி புதிய சபாநாயகர் செயற்படும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளார். எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டிய விவகாரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு நாற்பது வீதமும், ஆளும் தரப்புக்கு அறுபது வீதமும் ஒதுக்கப்படுகின்றமை ஜனநாயக மாண்புகளை மீறும் எதேச்சதிகாரம். இதனை அனுமதிக்க முடியாது என இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்பட எதிரணிகள் எல்லாம் வற்புறுத்தின.

எனினும் ஜனாதிபதி உரை மீதான இன்றைய விவாதத்தில் ஆளும் தரப்புக்கு அதிக நேரமும் எதிர்க்கட்சிகளுக்கு குறைந்தளவு நேரமும் ஒதுக்குவது என்று சபாநாயகர் முடிவெடுத்திருக்கின்றார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். மிகப் பெரும் அறுதிப் பெரும்பான்மையோடு - மூன்றில் இரண்டு பங்கு வலிமையோடு - நாடாளுமன்றத்தைக் கைப்பற்றியிருக்கும் பொதுஜன பெரமுனவின் போக்கும் நோக்கும் எப்படி இருக்கப் போகின்றன, நாடாளுமன்ற விடயங்கள் எதிர்காலத்தில் எப்படிக் கட்டவிழப் போகின்றன என்பதற்கு இந்த நேர ஒதுக்கீட்டு விவகாரம் ஒரு நல்ல உதாரணம்.

நிறைவேற்று அதிகாரமும், அதீத நாடாளுமன்றப் பெரும்பான்மையும் ஒன்று சேரும் போது எதேச்சதிகாரம் குதித்து விளையாடும். அது தவிர்க்க முடியாத கட்டாயமாக நாடு எதிர்கொள்ள போகின்ற பேராபத்தாக மாறலாம்.

# ஜனநாயகம் பாதுகாக்கப்படும் இடமாகவேண்டும் நாடாளுமன்று!

## நேற்றைய அமர்வில் சஜித் வலியுறுத்து



ஜனநாயக ரீதியில் பதிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

9ஆவது நாடாளுமன்ற அமர்வில் நேற்று (வியாழக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு வாழ்த்து தெரிவித்து தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற நீங்கள் கொழும்பு பல்கலைக்க ழகத்தில் பட்டத்தைப் பெற்றுள்ளீர்கள். இதேபோன்று நாடாளுமன்ற செயற்பாடுகளிலும் உங்களுக்கு அதிக அனுபவமும் உண்டு.

உங்களது தலைமையில் நாடாளுமன்ற செயற்பாடுகள் பக்கசார்பற்ற முறையில் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# தமிழர் தீர்வுக்கான தார்மீக பொறுப்பு ஐந்து ராஜபக்ஷக்களுக்கும் உள்ளது!

## மஹிந்தவுக்கு சங்கரி கடிதம்



ஐந்து ராஜபக்ஷர்களும் இணைந்து பிரச்சினைகளை கையிலெடுத்து அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் தார்மீக கடமை காணப்படுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் நேற்று (வியாழக்கிழமை) எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நீங்கள் பிரதம அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண் டமைக்கு எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். இப்பதவி தங்களுக்கு புதிதல்ல என்பதையும் அனை வரும் அறிவோம்.

2007ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி காலி முகத்திடலில் 59 ஆவது சுதந்திர தின விழாவில் நீங் கள், என்னையும் டக்ளஸ் தேவானந்தாவையும் குறிப்பிட்டு ஆற்றிய உரையின் பகுதியை தங்களிற்கு ஞாபகமூட்டுவதற்காக இங்கே தந்துள்ளேன்.

'தமிழ், இஸ்லாமிய மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர் கால உலகத்தை வளம் பெற வைக்க வேண்டும், என்று மொறக்ககாகந்த மகா சமுத்திர திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது நான் கூறியமையை, மீண்டும் வற்புறுத்தி கூறுவது யாதெனில், பயங்கரவா தத்தை இல்லாமல் செய்வதற்கு மிகப்பொருத்தமான ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கு வதே.

அதற்கு தற்போது தென்னிலங்கை சிங்கள மக்கள் தயாராகிவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் வெறித்தனமான வேண்டுகோளிற்கு இடமளியோம். இருப் பினும் நாம் நியாயமாகவும் நேர்மையாகவும் நடப்பின் குறைந்தபட்சம் ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் இசைந்து செயற்பட வேண்டும்'

என்னைப்பற்றி குறிப்பிட்டதில் இருந்து உங்கள் சிந்தனை என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எனது ஞாபகசக்திக்கு எட்டியவகையில் உங்களைப் போன்ற தரத்தில் உள்ள ஒருவர் பிரச்சினையையும் கூறி அதற்குரிய தீர்வையும் குறிப்பிட்டமை முதற் தடவையாகும்.

ஆகவே, ஐந்து ராஜபக்ஷர்களாகிய நீங்கள், சுயமாக முன்வந்து பிரச்சினையைகையில் எடுத்து அதற்கு தீர்வு காண வேண்டிய தார்மீக கடமையை புரிந்து, உங்களின் மூதாதையர்களின் நற்பெயரை காப்பாற்றி அவர்களின் ஆத்மா சாந்தியடைய வைப்பீர்கள் என நம்புகின்றேன்.

தேசபிதாவினுடைய கௌரவத்தை பாதுகாக்க வேண்டிய கடமை இன்று ராஜபக்ஷர்களுடையகையில்தான் உள்ளதுஎனகடிதத்தில் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளரை கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவு

மன்னாரில் இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வட பிராந்திய முகாமையாளரை எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) மன்னார் நீதிமன் றத்தில், வட பிராந்திய முகாமையாளரை லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் எம்.கணேசராஜா, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மன்றில் முன்வைத்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்தார்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமையோடு, அன்றைய தினமே சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை அரச போக்குவரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளர், நபர் ஒருவரிடம் முறைப்பாடு ஒன்றை சீர்செய்வதற்கு என 60 ஆயிரம் ரூபா பணத்தை மன்னாரில் வைத்து லஞ்சமாகப் பெற்ற நிலையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போனோர் உறவுகளின் அலுவலகம் அம்பாறையில் உடைப்பு; எச்சரிக்கையும் விடுப்பு!

அம்பாறை திருக்கோவில் பகுதியிலுள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு, அதில் எச்சரிக்கை அறிக்கையொன்று ஒட்டப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) இரவு, இடம்பெற்றதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி செல்வராணி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது –

தம்பிலுவில் மத்திய சந்தை கட்டடத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர் பதாதையை, இனந்தெரியாத சந்தேகநபர்கள், நேற்றுமுன்தினம் இரவு அடித்து உடைத்துள்ளனர் அதில் ஒரு துண்டுபிரசுரத்தை ஒட்டிவைத்து விட்டு அவர்கள் சென்றுள்ளனர்

“இதேபோன்றுதான் உனக்கும் செய்வோம்” என அத்துண்டு பிரசுரத்தில் எழுதப்பட்டு உள்ளது. இது ஓர் அடாவடித்தனம்.

இன்று தொலைத்துவிட்டு தேடுவது எங் களது உறவுகளை, நாங்கள் எவருக்கும் எதுவும் செய்யவில்லை. யாருடனும் எதுவித பிரச்சினைக்கும் செல்லவில்லை.

நாங்கள் எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியவேண்டும் எனத்தான் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தை வைத்து போராடி வருகின்றோம்.

இதனை செய்தவர்கள் யார் என எங்களுக்குத் தெரியாது. எனினும் அவர்களை விரைவில் கண்டு பிடிப்போம். இதேவேளை இது தொடர்பாக ஐ.நா. சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணையகம், திருக்கோவில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கின்றோம். இந்த செயற்பாட்டையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இம்மாதம் 30 ஆம் திகதி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் போராட்டமொன்றை நடத்த இருக்கும் நிலையில் இந்த செயற்பாட்டை ஏன் செய்தார்கள் எனத் தெரியவில்லை.

இதனை யார் செய்தாலும் எங்களது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மை நிலை தெரியும் வரை போராட்டத்தைத் தொடருவோம்.

இப்போது எங்களது உயிருக்கு யார் உத்தரவாதம். இந்தச் செயற்பாடு எங்களுக்கு அச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து மைத்திரி முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை

## நிலந்த ஜயவர்தன சாட்சியம்

கொழும்பு, ஓக.21

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினமும் சாட்சியமளித்தார்.

தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை என்று அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் 2019 ஆம் அண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி வெளிநாட்டு புலனாய்வுத் தகவல் கிடைத்தாலும் அது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்புக்கு மேற்கொண்ட விஜயத்துக்கும், குறித்த புலனாய்வுத் தகவலுக்கும் தொடர்பில்லை என்பதால், தாக்குதலுக்கு முன்னர் ஜனாதிபதிடம் கையளிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல் கோவையில் அந்த தகவல்கள் உள்ளடக்கப்படாமையே அதற்கான காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவிலிருந்து மேலும் ஐவர் விடுதலை!

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 5 பேர் குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 765 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 902 ஆக பதிவாகியுள்ளது.

இவர்களில் 2 ஆயிரத்து 765 பேர் குணமடைந்துள்ள நிலையில், 126 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம், இந்த தொற்று காரணமாக சிகிச்சை பலனின்றி 11 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்திய சாலைகளில் 97 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும் மாகாணங்கள்

## மனோ கணேசன் தெரிவிப்பு



நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் எந்தெந்த மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடவுள்ளதென்ற அறிவிப்பை அதன் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய நுவரெலியா, கொழும்பு, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர், ஒவ்வொரு மாவட்டத்திலும் கள நிலைமைகளையும் தனித்தனியாக ஆராய்ந்து, தனித்தோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியில் கூட்டணியாகவோ அல்லது வேறு நட்பு கட்சிகளுடன் கூட்டாகவோ தமிழ் முற்போக்கு கூட்டணி களமிறங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களுக்குமான ஆட்சி காலம் நிறைவடைந்துள்ள நிலையில், விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் சிக்கிய பலர் இலங்கை மீண்டனர்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் நேற்று (வியாழக்கிழமை) காலை கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை வந்தடைந்தனர்.

குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் 745 பேரே இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டார், டோஹாவிலிருந்து 20 இலங்கையர்கள் அதிகாலை 1.31 மணியளவில் கட்டுநாயக்க, பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியாவின் சென்னையிலிருந்து 290 இலங்கையர்கள் அதிகாலை 5.08 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோல குவைத்திலிருந்து 266 இலங்கையர்கள் அதிகாலை 4.22 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேவேளை, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 169 இலங்கையர்கள் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையங்களில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்கள் அனைவரையும் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு வர்த்தக நிலையங்கள் நுவரெலியாவில் திருட்டு!

நுவரெலியா – கொட்டகலை, ஹட்டன் நகரில் அமைந்துள்ள சில்லறை கடை மற்றும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையம் ஆகியவை நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை, திருடர்கள் சிலரால் சூரையாடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சில்லறை கடையொன்றில் சிகரட், பணம் மற்றும் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 70 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கடைகளின் முன்புறத்திலுள்ள இரும்பு கதவை உடைத்து, முன் வழியாக கடைக்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை தேடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ராஜாங்க உயர்கல்வி அமைச்சர் நியமனம் குறித்து அரசு ஆராய்வு

உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் பதவிக்குப் பொருத்தமான நபரை நியமிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இந்தப் பதவிக்கு விஜயதாஸ ராஜபக்ஷ முதலில் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் அந்தப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார்.

தான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைத் தவிர ராஜாங்க அமைச்சுப் பதவியை ஒருபோதும் வகித்ததில்லை என விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்நிலையில், விஜேதாச ராஜபக்ஷ இந்த பதவியை ஏற்க வில்லை என்றால், பொருத்தமான மற்றொரு நபரை நியமிக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

# வட்டி வீதங்கள் குறைப்பு மத்தியவங்கி அறிவிப்பு!

கொழும்பு, ஓக.21

தங்கக்கடன் அடகு, கடனட்டை என்பவற்றுக்கான வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை அறிவித் துள்ளது.

இதன்படி கடனட்டைகளுக்கான அதிகபட்ச வட்டியை 18 வீதமாக குறைப்பதற்கும், தங்கக்கடன் அடகு வட்டியை 10 வீதமாக குறைப் பதற்கும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை வங்கி மேலதிக பற்றுக்கான வட்டி 16 வீதமாக குறைக்கப்பட்டுள் ளதுடன், தற்போதைய கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றி பேணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிலை யான வைப்புக்கான வட்டி 4.5 வீதமாகவும் நிலையான சலுகை கடன் வட்டி வீதம் 5.5 வீதமாகவும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# முதலில் 19 நீக்கம்; பின் புதிய அரசமைப்பு

அரசமைப்பில் மாற்றத்தைச் செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நட வடிக்கை எடுப்போம். இதன்போது இந்த நாட்டின் அனைத்துமக்கள் சம்பந்தமாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

– இப்படித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

09ஆவது நாடாளுமன்ற அமர்வை நேற்று ஆரம் பித்துவைத்து அக்கிராசன உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம்**

ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி இடம்பெற்ற நாடாளு மன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சி யொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். ஸ்திர மான ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்காக மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தை பெற்றுத் தருமாறு நாம் மக்களிடம் கேட்டிருந்தோம்.

வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமை யின் கீழ் இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வுக்கும் அதன் நட்பு அணிகளுக்கும் பெற்றுத் தந்த நாட்டுப் பற்றுடைய மக்களுக்கு நான் முதலில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

சர்வஜன வாக்குப் பலம் நாம் அனைவரும் மதித் துப் பாதுகாக்க வேண்டிய ஜனநாயக உரிமையாகும். எனவே இந்தத் தேர்தலில் தமது பெறுமதியான வாக்கைப் பயன்படுத்திய அனைத்து இலங்கை வாக்காளர்களுக் கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கிறேன்.

**மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவேன்**



கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகப்பெரும் மக்கள் ஆணையை வழங்கியமை என் மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகவாகும். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவேன் என நான் வழங்கிய உறுதிமொழியை இதுவரையிலான எனது செயற்பாடுக ளின் மூலம் நிரூபித்திருக்கிறேன்.

ஜனாதிபதித் தேர்தல் முதல் நாடாளுமன்றத் தேர்தல் வரையான காலம் எமக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த ஒரு பொருளாதாரத்தையே நாம் பொறுப்பேற்றோம். நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் நாம் சிறுபான்மையான ஒரு அரசாங்கத்துடனேயே செயற்பட வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக எமக்கு இக்காலப்பகுதியில் முழு உலகையும் ஆட்கொண்டிருந்த கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய தாயிற்று. கொவிட் 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் உல கின் முக்கிய நாடுகள் கூட முடங்கியிருந்த நிலையில் அந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமக்கு இயலுமானது. நோய்த் தொற்று நிலைமை பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெளிநாடுகளினதும் பாராட்டைப் பெற்றன.

**மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதற்கான மிகப் பெரும் ஆணை**

இந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் பல்வேறு தடை களுக்கு மத்தியில் நாம் நாட்டை நிர்வகித்த முறைபற்றி நாட்டு மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்துள்ள மிகப் பெரும் மக்கள் ஆணை எடுத்துக்காட்டுகிறது. அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றத்திற்கு மக்கள் மதிப்பளித்து வருகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கு அப்போதுதான் முடியுமாக இருக்கும்.

**பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பேன்**

எமது நாட்டு அரசமைப்பின் பிரகாரம் எனது பத விக்காலப்பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் நான் உறுதியளித்திருக்கின்றேன். அதற்கு ஏற்ப அரச நிர்வாகத்திற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நான் முன்னணி பௌத்த பிக்குகளைக்கொண்ட ஆலோசனை சபை ஒன்றை அமைத்துள்ளேன். அதே போன்று தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் எமது பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் விசேட செயலணி ஒன்றை அமைத்துள்ளேன்.

பௌத்த சமயத்திற்கான முன்னுரிமை யை உறுதிசெய் யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என் பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது. எமது பாரம்பரிய மரபுரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கும் கிராமிய கலைகளை பாதுகாத்து மேம் படுத்துவதற்கும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி யுள்ளது.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்**

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் காரணமாக நாம் அரசை பொறுப்பேற்கும்போது மக்கள் மத்தியில் நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்தி ருந்தது. எமது அரசின் முக்கிய கொள்கை நாட்டின் பாதுகாப்பாகும் என்பதை உறுதி செய்து பாதுகாப்பு மற் றும் புலனாய்வுத் துறையை மறுசீரமைத்து மக்கள் மத்தி யில் ஏற்பட்டுள்ள அச்சத்தை போக்கி நாட்டின் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத் துள்ளோம். எந்தவொரு பிரஜைக்கும் தனதும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புப் பற்றி எவ்வித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்றை நாம் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறோம்.



**சமூகச் சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்கும் திட்டம்**

நான் உறுதியளித்தவாறு பொதுவான மக்கள் வாழ்க் கைக்கு தடையாக உள்ள பாதாள உலகச் செயற்பாடுகள், போதைப்பொருள் பிரச்சினை போன்ற சமூகச் சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத் திட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது.

நாம் உறுதியளித்தவாறு ஒழுக்கமான, பண்பாடான, சட்டத்தை மதிக் கும் சமூகமொன்றை கட்டியெழுப்பி வருகின்றோம். இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்ட பின்னர் அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதற்காக அதுவரை யில் இருந்துவந்த சம்பிரதாயங்களைமாற்றி நிபுணர் குழுவொன்றின் ஊடாக தகைமைகளை கண் டறிந்து நியமனங்களை மேற்கொள்ளும் முறையான பொறிமுறை யொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குடும்பத்தினர், நண்பர்கள், தனக்கு வேண்டியவர்களை நியமிக்காது தொழில் வல்லுனர்கள், தொழில் முயற் சியாளர்கள், கல்வியியலாளர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கொள்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

**உற்பத்திப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கை**

அதேபோன்று நாம் உற்பத்தி பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்காக அதிக விலையை பெற்றுக்கொடுத்துள் ளோம். ஏற்றுமதி பயிர்களை மீள் ஏற்றுமதி நடவடிக்கைக் காக இறக்குமதி செய்வதை நிறுத்தி யும், இந்த நாட்டில் பயிரிட முடியுமா னவற்றை இறக்குமதி செய்வதை முழுமையாக நிறுத்தியும் சுதேச விவ சாயிகளை பாதுகாப்பதற்கு நாம் நட வடிக்கை எடுத்தோம். விவசாயிகளுக்கு தேவையான உரத்தினை இலவசமாக வழங்கினோம். நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டிருந்த விவசாயக் காணி களில் மீண்டும் பயிரிடுவதற்கு மக்களை ஊக்குவித்தோம். இவை அனைத் தின் ஊடாகவும் நாம் இந்த நாட்டின் விவசாயத்துறைக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

நாம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் சுதேச தொழில் முயற்சியா ளர்களை இலக்காகக்கொண்டு வரிச் சலு கையை வழங்குவதற்கு நடவடிக் கை எடுத்தோம். வியாபாரத்துறையை வலுவூட்டுவதற்காக வட்டி விகிதத்தை குறைத்தோம். உள்நாட்டு வர்த்தகர்கள், தொழிற்துறையா ளர்களை பாதுகாப்பதற்காக போட்டித் தன்மை வாய்ந்த இறக்குமதிகளை மட்டுப்படுத்தினோம்.

(07 ஆம் பக்கம் பார்க்க...)

# சபையில் நேற்று அறிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

இந்த தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியிருப்பது இந்த வகையில் எங்களைப் பற்றி அவர்கள்மத்தியில்கட்டியெழுப்பப்பட்டுள்ளநம்பிக்கையே கார ணம் என்பது தெளிவானதாகும். நாம் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வோம்.

**மக்கள் வழங்கியுள்ள ஆணையை மிகச் சரியாகப் புரிந்துகொள்வோம்**

மக்கள் வழங்கிய ஆணையை மிகச் சரியாக புரிந்து கொள்வது இங்கு முக்கியமானதாகும். என் மீதும் பிர தமர் உள்ளிட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மக் கள்பிரதிநிதிகள்மீதும்மக்கள்வைத்துள்ளநம்பிக்கையை நாம் மதிக்கிறோம். மக்கள் இவ்வளவு பெரிய மக்கள் ஆணையை அரசுக்கு வழங்கி இருப்பது எதனை எதிர்பார்த்து என்பது பற்றி நாம் அறிவோம். எக்காரணத் தினாலும் அந்த எதிர் பார்ப்புகள் வீண் போவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

மக்கள் வாக்குகளினால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதி ஒருவரின் அடிப்படை பொறுப்பு மக்கள் சேவை யாகுமென்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த அனைத்து பதவிகளும் பொறுப்புக்களே அன்றி வரப்பிரசாதங்கள் அல்ல என்பதை நினைவில் வைத்து மக் களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

**மக்களின் எதிர்பார்ப்பு**

நான் இந்தத் தேர்தலில் எமது அணியை பிரதிநி தித்துவப்படுத்திய அனைத்து அபேட் சகர்களுக்கும் ஆதரவு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் செய் தேன். அரசியல் கூட்டங்களுக்குப் பதி லாக இந்த சுற்றுப் பயணங்களின்போது நான் மக் களிடம்சென்று நேரடியாக அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்தேன். மக்கள் முன்வைத்த கோரிக்கைகளில் மிகப் பெரும் பாலானவை பொதுத் தேவைகளேயன்றி தனிப்பட்ட தேவைகளோ அல்ல. சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்க ளின் பெரும்பாலான சாதாரணமான தேவை களுக்கும் தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

பல ஆண்டுகளாகதாம் வாழ்ந்து வரும் காணிகளுக்கு உரிய உறுதிகள் கிடைக்கப்பெறாத நிலையில் மக்கள் உள் ளனர். நாம் அவர்களுக்கு உரிய முறைமை களின் படி உறுதிகளை வழங்குவோம். உரிய மாற்றீடுகள் இன்றி பல பரம்பரைகளாக வாழ்ந்து வந்த, தாம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலங் களில் இருந்து எவரையும் வெளியேற்ற மாட்டோம்.

யானைகள் – மனிதர்கள் மோதல் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு தீர்வொன்றை கண் டறிவதற்கு தற்போது நிபுணர் குழுவொன்று அமைக் கப்பட்டுள்ளது. இதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பது நிலையான தீர் வொன்று தேவை எனும் காரணத்தினாலாகும்.

**குடிதண்ணீர் கஷ்டம்**

நாடளாவிய ரீதியில் நம்ப முடியாதளவு அதிக சதவீத மான மக்கள் குடிதண்ணீர் இன்றி கஷ்டப்படுகின்றனர். நாம் இந்த மனிதாபிமான பிரச்சினையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். ஒரு தேசிய கொள் கையாக அடுத்து வரும் சில ஆண்டுகளில் அனைத்து பிரதேசங்களுக்கும் குடிதண்ணீரை பெற்றுக்கொள்ள நாம் ஒரு விசேட நிகழ்ச் சித்திட்டத்தை ஆரம்பிப்போம்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வி பெறு வதற்கான பொருத்தமான பாடசாலைகளைப் பெற்றுத் தருமாறு கோருகின்றார்கள். போதுமானளவு தேசிய பாடசாலைகள் இல்லாத குறை எல்லா இடங்களிலும் உள்ளது. பெரும்பாலான பாடசாலைகளில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, போதுமானளவு விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வாசி கசாலைகள், விளையாட்டு வசதிகள் இல்லாமை பற்றி அடிக்கடி கூறக் கேட்கிறோம். பொருளாதாரத்திற்கு வினைத்திறனான பங்களிப்பை வழங்குவதற்காக விஞ் ஞான, தொழிநுட்ப பாடங்களைக் கற்குமாறு நாம் பிள்ளைகளிடம் கூறினாலும் அதற்கான அடிப்படை வசதிகள் பெரும்பாலான பாட சாலைகளில் இல்லை.

இந்த நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் தாம் விரும்பும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு தேவை யான கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு உதவுவதற்கும் அர சாங்கம் மேற்காண்டு வரும் செலவுகள் எதிர்காலத்திற் காக செய்யப்படும் முதலீடாகும். புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுகளின் ஊடாக நாம் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்போம்.

கிராமிய வைத்தியசாலைகளில் வளங்களும் வசதி களும் மிகக் குறைவாக உள்ளன. வைத்தியர்கள், தாதி கள் மற்றும் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. சில பிரதேசங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இலவச சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கும்போது ஏற்படும் இந்த நிலைமைகளை நாம் இல்லாமல் செய் வோம்.

ஆயுர்வேத மருத்துவத்தையும் சுதேச வைத்தியத் துறையையும் முன்னேற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

**உள்நாட்டில் மருந்து உற்பத்தி**

அதிக அந்நியச் செலாவணியை செலவு செய்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு பதிலாக பல ம ருந்துகளை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம். மருந்து இறக்குமதியின்போது இடம்பெறுகின்ற பெரும் ஊழல் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் காரணத்தினால்தான் மருந்து உற்பத்திக்கு தனியான இராஜாங்க அமைச் சொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மக்களில் அதிகளவானவர்கள் இன்றும் சுய தொழில் களை செய்வதன் மூலமே வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக உள்ளனர். அவர்கள் கேட்ப தெல்லாம் உரிய காலத்திற்கு நீரையும் உரத் தையும் பெற்றுத் தருமாறு மட்டுமே யாகும். இந்த கோரிக்கைகளை நாம் நிறை வேற்ற வேண்டும். அந்த வகையில் நாடளாவிய ரீதியில் குளங்களை புனர மைப்பதுடன், நீர்ப்பாசன அபிவிருத்திக்கு விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் முன்னெடுப்போம்.

**வேலை வாய்ப்பின்மை**

வேலைவாய்ப்பின்மை இன்று இளைஞர் தலைமுறை முகங்கொடுக்கும் ஒரு பாரிய சமூகப் பிரச்சி னையாகும். இதற்காக நாம் குறுகிய கால, நீண்டகால பல தீர்வுகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

நாம் தற்போது நாட்டில் வாழும் வறிய குடும்பங்களை இலக்காகக்கொண்டு ஒரு இலட்சம் தொழில்களை வழங் குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்துள் ளோம். அதனோடு இணைந்ததாக 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கும் அவர்களி டமிருந்து வினைத் திறனான சேவையை பெற்றுக் கொள்வதற்காக முறையான பயிற்சி ஒன்றை வழங்கு வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரச தொழில்களை வழங்கும்போது நாட்டில் மிகவும் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தொழில் வாய்ப்புகளை வழங்கும்போது அனைத்து மாகா ணங்களுக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் அது நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

அரச நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் ஒவ் வொருவரும் நாட்டுக்கு வினைத்திறனான சேவையை வழங்கவேண்டும். எனவே எந்தவொரு அமைச்சுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தேவையற்ற வகையில் ஆள் சேர்ப்புகள் செய்யப்படமாட்டாது.



தத்தமது துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்பு டன் நாட்டுக்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுமாறு அனைத்து அமைச்சர்களிடமும் இரா ஜாங்க அமைச்சர்களிடமும் நான் கேட்டுக்கொள்கி றேன். அனைத்து அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக் களில் அந்தந்த துறைகளில் தனியார் துறையின் ஒத்து ழைப்புடன் தொழில் வாய்ப்புகளை உருவாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று குறித்த துறை களில் சுயதொழில் மேம்பாட்டுக்கும் தொழில் முயற்சி களை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எமது பொறுப்பும் கடமையுமாக இருக்க வேண்டியது தொழில்களை உருவாக்குவதேயன்றி தொழில்களை வழங்குவதல்ல.

**பொருளாதாரப் புத்தெழுச்சி**

உள்நாட்டு மற்றும் பூகோள சவால்களை வெற்றி கொள் ளும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்த வேண்டுமானால் நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். இம்முறை இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உண்மையான பொருளாதார புத்தெழுச்சியை ஏற் படுத்துவதற்காக மக்கள் மைய பொருளாதாரம் ஒன்றின் தேவையை நாம் கண்டறிந்துள்ளோம். அமைச்சுக்களை ஒதுக்கும்போதும் அவற்றுக்கான விடயதானங்களை தீர்மா னிக்கும் போதும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மீது தாக்கம் செலுத்தும் விவசாயம். பெருந் தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் அதேபோன்று பாரம்பரிய கைத்தொழில்கள், சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது சம்பந்தமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஏற்றுமதியை அதிகரிப்போம்**

தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் எமது அடிப்படை இலக்குகளாகும்.

தற்போது எமது ஏற்றுமதி பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் போன்றவற்றிலிருந்து



கிடைக்கும் வருமானம் திருப்திகரமான நிலையில் இல்லை.

தேயிலை பயிர்ச் செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் சிறிய மற்றும் நடுத்தர தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் அரசாங்கம் உதவிகளைச் செய்யும். மூடப்பட்டுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் காரணமாக அவர்கள் அதிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவற்றை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன். முறை கேடுகளை ஒழித்து உயர் தரங்களுடன் கூடிய தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்போம். "Ceylon Tea' வர்த்தக சின்னத்திற்கு உள்ள அங்கீகாரத்தை பலப்படுத்துவோம்.

தென்னையை புதிதாக பயிரிடுவதற்கு ஊக்குவிப்பு களை வழங்குவோம். இறப்பருக்கு உரிய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இந்நாட்டில் தயாரிக்கப்படும் இறப்பர் பாவனை, இறப்பர் சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிப்போம். செம்பனை பயிர்ச் செய்கையை நாம் முற்றாக நிறுத்துவோம்.

மிளகு, கறுவா போன்ற ஏற்றுமதி பயிர் உற்பத்தியை நாம் ஊக்குவிப்போம். விவசாய உற்பத்திகளுக்கு பெறு மதி சேர்த்து ஏற்றுமதி செய்வதன் ஊடாக விவசாயிகளுக்கு ஸ்திரமான விலையை பெற்றுக்கொடுப்பதுடன், பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

**மக்களின் வீட்டுப் பிரச்சினை**

அமைச்சுகளுக்கு பொறுப்புக்களை வழங்கும்போது நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய பல்வேறு துறைகளை இனங்கண்டு அவற்றுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவும் அவர்களுக்கான விடயதானங்களை வழங்கவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித வள அபிவிருத்தியை நாம் முன்னுரிமைக் குரியதாக இனங்கண்டு இருப்பதால் அமைச்சுக்களை ஒதுக்கும்போது கல்வித்துறையை ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதில் வேறுபட்ட பொறுப்புகளுக்காக நான்கு இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளோம். முன்பள்ளிப் பாடசாலைகள், கல்வி மறுசீரமைப்பு, திறன் விருத்தி, அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளுக்கான கல்வி ஆகிய துறைகளுக்கு தனியான இராஜாங்க அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவற்றில் உள்ள முக்கியத்துவத்தின் காரணமாகவே ஆகும்.

**தொழிநுட்பக் கல்வியில் கவனம்**

எமது எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டுமாயின் தொழிநுட்ப கல்விக்கு விசேட கவனம் செலத்த வேண்டும். 06ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை கல்வி மறுசீரமைப்பில் நாம் இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

உயர்தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக் கும் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிப்பதுடன், திறந்த பல்கலைக்கழக முறைமையை முன்னேற்றுவதற் கும் தொலைக்கல்வியை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பாடத்துறைகளை மறுசீரமைத்து இந்த பட்டப்படிப்புகள் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங் களிப்பு வழங்கக்கூடிய துறைகளாக உறுதி செய்யப்படும்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கே மீள் விற்பனைசெய்தமை தொடர்பிலான விவகாரத்தில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு உள்ள தொடர்பு வெளிப் படுத்தப்பட்டுள்ள நிலையில், அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப் படை முகா மின், உளவு மற்றும் நடவடிக்கை பொறுப்பதிகாரி யாக செயற்பட்ட சப் இன்ஸ்பெக்டரான அஜித் பிரேம லால் என்பவரே இவ்வாறு சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை தற்போது நான்காம் மாடியில் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடை சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்துவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன கூறினார்.

பாரிய போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற் றும் பாதாள உலகத் தலைவர்களுடன் இணைந்து போதைப் பொருள் கடத்தல், விற்பனையில் ஈடுபட் டமை, ஆயுதங்களை ஒன்றுதிரட்டியமை தொடர்பில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதி காரிகள் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் வெளிப் படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சர் ஜாலிய சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

"பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஆதாரங் களுடன் பாதுகாப்பு பெற்றுக் கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களையும் விரைவில் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துவோம்." – என பிரதி சொலிஸ்டர் ஜெனரால் திலீப் பீரிஸ் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் கடந்த ஜூலை 21 ஆம் திகதி நீதிமன்றில் வைத்து அறிவித் திருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, சி.ஐ.டி.யின் உதவி பொலிஸ் அத்தியட்சர் மெரில் ரஞ்சன் லமா ஹேவாவின் கீழான சிறப்புக் குழு நேற்றுமுன்தி னம் சி.ஐ.டி.க்கு குறித்த அதிரடிப் படை வீரரை அழைத்து நள்ளிரவு வரையிலும் விசாரணை நடத் திய பின்னர் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைவாக பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கடந்த செவ்வாய் இரவு 10.30 மணியளவில் அந்த சப் இன்ஸ்பெக்டரைக் கைது செய்துள்ளது.

தெற்கிலிருந்து கொழும்புக்கு, போதைப் பொருளை கொண்டுவரவும், சில போலியான ஹெரோயின் சுற்றி வளைப்புக்களை முன்னெடுக்கவும் கைது செய்யப்பட்டுள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரி வினருடன் இணைந்து எஸ்.ரி.எவ். அதிகாரிகள் சிலர் செயற்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் இந்த விவகாரத்தில் இதுவரை 24 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலை யில் அவர்களில் 11 பேர் பயங்கரவாத தடை சட்டத் தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஏனைய 13 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஷானி அபேசேகரவிற்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக.21

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கு மாறு உத் தரவிடப்பட்டுள்ளது.



அதேநேரம், உபபொலிஸ் பரிசோதகர் ரோஹனமெண் டிஸையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இந்த இருவரையும் நேற்று (வியாழக்கிழமை) கம்பஹா நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்ப டுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவர்களை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம்திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீ தி வான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# யார் ஐ.தே.க. தலைவரானாலும் நாட்டுக்கு அது நல்லது அல்ல!

## என்கிறார் சரத் பொன்சேகா

'ஐக்கிய தேசியக்கட்சிக்கு யார் தலைவராக தெரிவு செய்யப்பட் டாலும் நாட்டுக்கு அது நல்ல தல்ல' என நாடாளுமன்ற உறுப் பினர் சரத் பொன்சேகா தெரிவித் துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர் களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.



ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதர வாளர்கள் ஊடாகத்தான் நாம் நாடாளுமன்றத்துக்கு செல்ல இருக்கின்றோம்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் மற்றும் கட்சியின் பின்புலமொன்று இல்லாமலேயே இம்முறை நாடா ளுமன்றத்துக்கு நுழைய இருக்கின் றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, 25 வருடங்களாக கட்சியை சிதைக்கும் வகையில் செயற்பட் டுள்ளார். அவரது செயற்பாடுக ளின் பிரதிபலன்களைதான் நாம் தற்போது பார்க்கின்றோம்.

மேலும் பலரின் பெயர் கட்சி யின் தலைமை பதவிக்கு முன் மொழியப்பட்டிருந்தாலும், எல் லோரும் ஒரே பண்புகளைக் கொண்டவர்கள்தான்.

கட்சியில் யார் வந்தாலும் பெரியதொரு மாற்றம் ஏற்பட்ப் போவதில்லை; கட்சிக்கும் ஒன் றும் ஆகப்போவதில்லை.

நான் நினைக்கின்றேன், இவர்களும் சிறிகொத்தவை கைப்பற்றுவது தொடர்பிலேயே ஆர்வமாக இருப்பார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மாவட்டத்தில் விபத்துகள் அதிகரிப்பு வேகம் குறைத்து விவேகமாக செயற்படுக!

## வைத்தியர் யமுனானந்தா அறிவுரை

யாழ் மாவட்டத்தில் தற்போது வீதி விபத் துக்கள் அதிகரித்து காணப்படுகின்றன. வேகத்தைக் குறைத்து விவேகமாகச் செயற்படுவதன் மூலமே விபத்துக்களைக் குறைக்க முடியும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அதி கரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து காணப்படுகின் றன.

கொரோனா தாக்கத்தின் பின் போக்கு வரத்து முடக்கங்கள் காணப்பட்டதன் கார ணமாக விபத்துக்கள் குறைந்து காணப் பட்டது. இலங்கையிலேயே வீதி விபத்து களால் இறப்பு ஏற்படும் வாய்ப்புகள் இல்லை என்ற நிலை இருந்தது.

ஆனால் 6 மாதத்திற்குப் பின்னர் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித் துக் காணப்படுகின்றது. கடந்த மாதம் மட் டும் யாழ் வைத்தியசாலையில் சுமார் 180 பேர் வீதி விபத்துக்களால் காயப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் கள். ஒரு சிலர் இறந் துள்ளார்கள் பலர் வீதி விபத்துக்கள் இடம் பெற்ற இடத்தி லேயே இறந்துள்ளார்கள்.

இந்நிலையிலே வீதி விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன, அவற்றை எவ் வாறு தவிர்ப்பது என்பன பற்றிய விழிப் புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட வீதி விபத்துக்களை ஆராய்ந்த போது, பாதசாரிகளை வாக னங்கள் மோதி வீதிகளிலே காயப்பட்டு நினைவிழந்த நிலையில் வைத்தியசா லைக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். குறிப் பாக ஒரு டிப்பர் அடித்ததால் ஏற்பட்ட விபத் தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார் குறித்த விபத்து போன்ற விபத்துகளால் கடுமையான காயங்களிற் குட்பட்டவர்கள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலை விபத்து பிரிவினை எடுத்துக் கொண்டால் விபத்து பிரிவில் 70 சதவீதமா னவர்கள் வீதி விபத்துக்களால் காயம டைந்து நிரந்தர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டவர்களாக காணப்படுகின்றார்கள்.

மேலும் வீதி விபத்துக்களின் போது பாதசாரிகளால் ஏற்படுகின்ற விபத்து இருக் கின்றது மோட்டார் சாரதிகளுக்கு ஏற்படு கின்ற விபத்து இருக்கின்றது குறிப்பாக



மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் வீதி விபத்துக்களிற்குள்ளாகும் தன்மை அதி கமாக காணப்படுகின்றது.

நாய்கள் குறுக்கே பாயும் போது ஏற் படுகின்ற விபத்து காணப்படுகின்றது அடுத்ததாக, யாழ் மாவட்டத்தில் நகரத்தை அண்டிய பகுதிகளில் வேகத்தின் காரண மாக வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இலுப்பையடிச்சந்தி, நாவலர் வீதி போன்ற பகுதிகளில் சனநெரிசல் அதிகமாகக் காணப்படுவது இந்த வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின் றன

அடுத்ததாக போக்குவரத்து அதிகரித் துள்ளதன் காரணமாக விபத்துகள் அதி கரிக்கின்றன. குறிப்பாக கொழும்பை நோக் கிய போக்குவரத்துக்கள் யாழ் நகரிலி ருந்து தொடங்காமல் காங்கேசன்துறையில் அல்லது மானிப்பாய் போன்ற பகுதிகளில் தொடங்கும் போது அந்தப் பேருந்துகள் விரைவாக சாதாரண வீதிகளில் பயணிக்கும் போது இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன. போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின்றது.

அதேபோல் கனரக வாகனங்கள் பாவ னையினை நகர வீதிகளில் மட்டுப்படுத்தி னால் இந்த விபத்துகளை குறைக்கலாம். அத்தோடு அந்தக் கனரக வாகனங்கள் மிகவும் வேகமாக பயணிப்பதும் இந்த விபத்துகளுக்குக் காரணமாக அமைய லாம்

நகரப்பகுதிகளில் கனரக வாகனங்கள் பயணிக்கின்ற தன்மை தற்போது அதி கரித்துக் காணப்படுகின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் பாடசாலை வீதி களில் நெரிசல் காணப்படுகின்ற போதி லும் விரைவாக வேலைக்கு செல்ல வேண் டும். பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் வேகமாக செல்லும் போதும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன.


எனவே வேகத்தைக் குறைத்து விவேக மாக பயணிப்பதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சம்பந்தன், விக்கி, கஜன் உள்ளிட்ட தலைவர்கள் புதிய சபாநாயகருக்குச் சபையில் வாழ்த்துரை!

கொழும்பு, ஓக. 20

நாடாளுமன்றத்தில் இன்று புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு கட்சிகளின்தலைவர்கள்வாழ்த்துத்தெரிவித்துஉரையாற்றினார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் தலைவர் மைத்திரி பால


சிறிசேன, தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட்டவர்கள் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து சபையில் உரையாற்றினார்கள்.

# மக்களுக்கு சேவையாற்ற கூட்டமைப்பால் முடியாது அதனாலேயேதான் அதிலிருந்து விலகிச் சென்றேன்

## தனது நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றார் வியாழேந்திரன்

கொழும்பு, ஓக.20

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த பிரச்சினையில் நான் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. நான் கூட்டமைப்பை விட்டு வெளியேறியமை, கூட்டமைப்பில் இருந்தால் மக்களுக்கு எதுவும் செய்யமுடியாது என்பதற்காகவே என தபால் தொடர்புகள், வெகுசன ஊடகத் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வியாழேந் திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இப்போது தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாதிருக்கிறது. தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கலையரசனின் பெயரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவு செய்த நிலையில் மாவை சேனாதிராசாவுக்கு அந்த பதவி வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த பிரச்சினை, இதில் நான் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு கேள்வி முன்வைக்கப்படும் போது ஓர் அபிப்பிராயத்தையும் கூறியாக வேண்டும்.

ஒரு தமிழ் மாவட்டம் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லா திருக்கும் போது அதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.– என்றார்.

மேலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினூடாக அரசியலுக்கு வந்து அதிலிருந்து விலகியமை தொடர்பில்



கேள்வி எழுப்பப்பட்டது.

கட்சி அரசியல் என்பது மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பயணத்திற்குத் துணை புரியும் ஒரு சாதனம்.

அந்தச் சாதனத்தால் நமது தேவையை அடைய முடியாதென நமக்குத் தெரியும் போது எம்மால் அப்பாதையில் பயணிக்க முடியாது.

அப்படியாயின் மாற்று வழியொன்றைத் தேடவேண்டும். எந்த மக்கள் என்னைத் தெரிவு செய்தார்களோ அந்த மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே நான் அதிலிருந்து விலகினேன்.

மக்கள் எத்தனை வருடங்களுக்கு துன்பங்களையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்வது? நன்றாகச் சிந்தித்தால் நான் தெரிவு செய்த பாதை சரியானது என்பது புரியும்.– என்றார்.

# கடற்படைக்குக் காணி வழங்க மாதகல் மக்கள் கடும் எதிர்ப்பு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 20

மாதகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு மேலதிகமாக தனியார் காணிகளைச் சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் இன்று வருகை தந்தபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினருக் காக அளவீடு செய்ய இன்று வருகை தந்திருந்தனர்.இதற்கு அப் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் நில அளவைப் பணியைக் கைவிட்டு அவர்கள் திரும்பிச் சென்றனர். இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதற்றமான சூழல் காணப்பட்டது.

ஏராளமான பொலிஸாரும் கடற்படையி னரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றிய பொலிஸார், காணி உரிமையாளரை அழைத்து பேசியிருந்தனர். காணி உரிமையாளர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணி யுமான கனகரட்னம் சுகாஷ் சென்று கடற்படை மற்றும் பொலிஸாருடன் பேசினார்.

இதன்போது காணி உரிமையாளர் கள் காணியை வழங்க மறுத்த நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

# சனிக்கிழமை முதல் மின்வெட்டு இல்லை

நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று இலங்கை மின்சார சபை அறிவித் துள்ளது.

நாடுமுழுவதும் தடங்களின்றிய மின் விநியோகத்தை நாளை மறுதினம் முன்னெடுக்க முடியும் என்று மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்ததால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் சுழற்சி முறை யில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

# கனகராயன்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஓக. 20

வவுனியா, கனகராயன்குளம் குஞ்சுக் குளம் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் விசேட அதிரடிப் படையினரால் இன்று மீட் கப்பட்டன.

அந்தப்பகுதியில்உள்ள காணிஒன்றைப்புனரமைப்பு செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வந்த நிலையில் நிலத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு கனகராயன் குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வெடிக் காத நிலையில் காணப்பட்ட 8 மோட்டார் செல்களை மீட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுடன் அந்த வெடி பொருள்கள் செயலிழக்கச் செய்யப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# முரசுமோட்டைப் பகுதியில் ஐம்பது கிலோ கஞ்சா மீட்பு



## இளம் குடும்பப் பெண் கைது

கிளிநொச்சி, ஓக.20

கிளிநொச்சி கண்டாவளை பிர தேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முரசு மோட்டை பகுதியில் 50 கிலோ எடையுடைய கஞ்சா பொதியுடன் இளம் குடும்பப்பெண் இன்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி இரணைமடு விமானப்படையினரால் வழங்கப்பட்ட தகவல் கிளிநொச்சி புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பதிகாரி ஊடாகக் கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.அதை அடுத்து அவரது வழிநடத்தலில் கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையப் பதில் கடமைப் பொறுப்பதிகாரி சம்பிக்க தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கஞ்சா பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை மறைத்து வைத்திருந்த குற்றத்திற்காக இளம் குடும்ப பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கையை விமானப்படையினர் மற்றும் புலனாய்வு பிரிவின ரின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டி ருந்தனர்.



சுற்றிவளைப்பில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிலோ எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட பெண்ணை நான்கு நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் அனு மதி கோரியுள்ளனர்.


இந்த கஞ்சா பொதிகள் கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரால் கொண்டு வரப்பட்டன எனவும், சுற்றிவளைப்பின் போது அந்த சந்தேக நபர் தப்பியோடியுள்ளார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுயநிர்ணய உரிமை பெற தமிழருக்கு உரித்து உண்டு

## விக்னேஸ்வரன் சபையில் கன்னி உரை



கொழும்பு, ஓக 20

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தேசம் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களின் உள்ளார்ந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வரலாறு பற்றிய தவறான கண்ணோட்டங்கள் களையப்பட்டால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் இந்த நாட்டில் உதயமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் சபையில் வலியுறுத்தினார்.

9 ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய பின்னர் புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்து தெரிவித்தபோதே நீதியரசர் விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

தனது பேச்சை தமிழில் ஆரம்பித்த நீதியரசர் விக்னேஸ்வரன், உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ் என்றும் இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என் றும் அந்த தமிழ் மொழியில் தனது உரையை ஆரம்பிப்பதாகவும் கூறி பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றி சிங்கள மொழியில் தனது உரையை நிறைவு செய்தார்.

அவர் தனது உரையில் –

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார் பில் முதற்கண் என் வாழ்த்தை தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழி யுமாகிய எனது தாய் மொழியிலும் ஆரம்பித்து பின்னர் எல்லா மக்களையும் இணைக்கும் மொழியிலும் எனது வாழ்த்தைக் கூறுகின்றேன். எமது நாடாளுமன்ற பாரம்பரியத்தின் மிக உயர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளமைக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன் – என்றார்.

சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தன தனது நீண்ட அரசியல் பயணத்தின் ஊடாக பெற்றுக் கொண்டுள்ள அனுபவத்தை சபாநாயகர் பதவிக்கு நல்லமுறையில் பயன்படுத்துவார் என்றும் விக்னேஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டார்.

இன்றைய அரசு மிகவும் பலமான நிலையில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி அதேபோல மறைந்த ஜே. ஆர். ஜெயவர் தனவின் கீழ் யானைப் பலத்துடன் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தை ஏற்படுத்தி இன்று ஒரே ஒரு உறுப்பினர் என அளவுக்கு அதன் பலம் சுருங்கிவிட்டதாக தனதுரையில் கோடிட்டு காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரன், அதே பிழையை தற்போதைய பொதுஜன பெரமுன அரசும் விட்டு அதே பாதையை தெரிவு செய்யாது என்று நம்புவதாக கூறினார்.

எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டு இதேமாதிரியான ஒரு அரசு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின்போதே 1983 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஒரு உறுப்பினராக குறுகிப்போயுள்ள பாதையை இந்த அரசும் நிச்சயமாக எதிர் காலத்தில் தொடரக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளில் இருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உண ருகின்ற வகையிலும் இலங்கை தாய் நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன். என்று கூறினார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி அழுத்தம் திருத்தமாக தனது உரையில் விக்னேஸ்வரன் வலியுறுத்தினார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையுடன் மரபு, பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம்பற்றியதவறானவரலாற்றுகண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும் என்று கூறினார்.

சிங்கள மேலாதிக்க அதிகாரத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும் நீதியரசர் தனது இந்த உரையில் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

சபாநாயகர் அவர்களே, பௌத்த மதத்தை பின்பற்றும் ஒரு நாட்டிலே, மேலாதிக்க அதிகார பிரயோகத்தை நாங்கள் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏனென்றால், சிங்கள கிராமத்தவர்கள், ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை இருக்கும் என்பதற்காக பின்வரும் பழமொழியை கூறுவார்கள் என்பது எமக்கு தெரியும். அதாவது, (கலகல பே பல பலவே) முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும் என்பதே அது. என்று கூறினார்.

# சபாநாயகராக யாப்பா ஏகமனதாகத் தெரிவு

## சபையில் வேறு முக்கிய பதவிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு

கொழும்பு, ஓக.20

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் சபா நாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதலாவது சபை அமர்வு நேற்று முற்பகல் 9.30 மணி யளவில் ஆரம்பமாகியது. இதன்போது சபாநாயகர் பத விக்காக மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை சபை முதல்வர் தினேஷ் குண வர்தன முன்மொழிந்தார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண் டார வழிமொழிந்தார்.



அத்துடன், பிரதி சபாநாயகராக ரஞ்சித் சிலம்பலாபிட்டியவும், குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொள்ளப்பட்டார். சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவின் பெயரும், ஆளுங் கட்சி கொறடாவாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

கட்சித்தலைவர்களின் புதிய சபாநாயகருக்கான வாழ்த்துரைகள், சபாநாயகரின் நன்றி உரை ஆகியன முடிவடைந்த பின்னர் சபை இன்று மாலை 3 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

# கொழும்புத்துறையில் ஒருவர் மீது வாள்வெட்டு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 20

யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியில் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

நெழுக்குளத்தைச் சேர்ந்த கவிச்சந்திரன் சிவநேஸ்வரன் (வயது – 25) என்பவரே படுகாயமடைந்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல், மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பித்தது. பழைய பகையைத் தீர்க்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

# புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தரத் தீர்வு வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சித்தார்த்தன்

புதிய அரசமைப்பில் நியாயமான தீர்வொன்று தேசிய இனப்பிரச்சினைக்கு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்றின் முதல் அமர்வில் இன்று (வியாழக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு வாழ்த்து தெரிவித்த அவர், நாட்டில் 70 ஆண்டுகளாக இழுபறியில் உள்ளதும், நாட்டில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ள தேசிய இனப்பிரச்சி னைக்குத் தீர்வைப் பெறும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு மஹிந்த யாப்பா உதவுவார் என தான் நம்புகிறார் எனவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

# முதலில் 19 நீக்கம்;...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மின் உற்பத்தி, கைத்தொழில்

மின்சாரத்தின் விலை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய காரணியாகும். எனவே மீள்பிறப்பாக்க, சக்தி வள உற்பத்தி மார்க்கங்களை மேம்படுத்துவதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்ப்பதற்காக புதிய தொழிநுட்ப பாவனைக்கும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கத்திறன்வாய்ந்த வகையில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கும் வர்த்தகர்களுக்கு உதவுவதற்கும் குறித்த அமைச்சுக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

எமது நாடு இயற்கை வளம் நிறைந்த ஒரு வளமான நாடு என்ற போதிலும் பெறுமதி சேர்க்கும் கைத்தொழில்கள் இன்னும் சர்வதேச மட்டத்திற்கு முன்னேறவில்லை. இரத்தினக்கற்கள், கனிய மணல் போன்ற இயற்கை வளங்களை ஏற்றுமதி செய்யும்போது பெறுமதி சேர்த்து நாட்டுக்கு அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பாரம்பரிய கைத்தொழில்களான பத்திக், சுதேச ஆடைகள், பித்தளை, பிரம்புகள், மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள், இரத்தினகற்கள், ஆபரணங்கள் கைத்தொழிலை உரிய வகையில் முன்னேற்றுவதற்கும் சுயதொழில்களை ஊக்குவிப்பதற்கும் புதிய தொழில்களை உருவாக்குவதற்கும் வர்த்தக துறையை கட்டியெழுப்பி பெருமளவு வெளிநாட்டு வருமானத்தை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும்.

நாட்டு மக்களில் மூன்றில் ஒருபகுதியினர் விவசாயம், பெருந்தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் ஆகியவற்றை ஜீவனோபாயமாக கொண்டுள்ளனர். நாம் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக சம்பிரதாய முறைமைகளை விஞ்சிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அணுகுமுறைகளின் தேவை உள்ளது. விவசாயத்துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் மீன்பிடி, கடற்றொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளை நேரடியாக இலக்காகக் கொண்டு அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்டிருப்பது இதற்குத் தேவையான உரிய கவனத்தை வழங்குவதற்கே ஆகும்.

உயர் தரம்வாய்ந்த விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்து, அவற்றை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைமைகளை அறிமுகப்படுத்தி வீண்விரயத்தை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். பசும்பால் உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தியையும் நாம் முன்னேற்றுவோம்.

### நஞ்சற்ற உணவு உற்பத்தி

நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி செய்யும் நோக்குடன் அடுத்த தசாப்தத்திற்குள் இலங்கையின் விவசாயத் துறையை முழுமையாக சேதன பசளைப் பாவனைக்கு மாற்றும் வகையில் உள்நாட்டில் சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மீன்பிடித் கைத்தொழிலில் பாரிய முன்னேற்றத்தை கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். கடலினால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கு மீன் இறக்குமதியை நாம் நிறுத்த வேண்டும். மீன் பிடி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான புதிய தொழிநுட்பத்தையும் இயந்திரங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். ஆழ்கடலில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலநாள் படகுகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக அனைத்து மீன்பிடி துறைமுகங்களையும் நவீனமயப்படுத்துவதுடன், தேவைக்கு ஏற்ப புதிய துறைமுகங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

சட்டவிரோதமான சர்வதேச பலநாள் படகுகளின் மூலம் இலங்கை கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டலை நிறுத்துவோம். நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழிலை முன்னேற்றுவதற்கும் புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவது எமது திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

### சகல அமைச்சுக்களுக்கும் தெளிவான விடயதானங்கள் மற்றும் பொறுப்புக்கள்

அனைத்து அமைச்சுக்களுக்கும் இராஜாங்க அமைச்சுக்களுக்கும் தமது விடயதானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தெளிவாக வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர்களினால் குறித்த துறைகளின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுடன், இராஜாங்க அமைச்சுக்களினால் செயற்பாடுகள், வினைத்திறன், கண்காணிப்பை மேற்கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தமது அமைச்சுக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும் நிதிப் பொறுப்பு தம்மிடம் உள்ள காரணத்தினாலும் இராஜாங்க அமைச்சர்களுக்கு தடையின்றி தமது பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும்.

அரச சேவையின் மூலம் தாம் எதிர்பார்க்கும் சேவை வினைத்திறனாகவும் உரிய வகையிலும் கிடைப்பதில்லை என பொதுமக்களிடம் குற்றச்சாட்டு உள்ளது. எனவே உங்களின் கீழ் உள்ள அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொடுக்குமாறு நான் அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். மக்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எவ்வித பெறுமானத்தையும் கொண்டுவராத சில நிறுவன செயற்பாடுகளினால் ஏற்படுவது கால விரயம் மட்டுமே என நான் கடந்த காலத்தில் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு சென்ற வேளையில் கண்டுகொண்டேன். மக்களுக்கு சேவைகளை வழங்கும் போது பின்பற்றும் பாரம்பரிய முறைமைகளுக்கு பதிலாக நிறுவன செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு மக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக புதிய முறைமைகளை நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இதற்காக முடியுமானளவு புதிய தொழிநுட்ப தீர்வுகளை கண்டறிய வேண்டும்.

### வீண் விரயம், ஊழலை ஒழிப்போம்

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் வீண் விரயத்தையும் ஊழலையும் ஒழிப்பதாக நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். இது எம் அனைவரினதும் முக்கிய பொறுப்பாகும். அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களில் வீண்விரயத்தையும் ஊழலையும் முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்போம். வீண்விரயம், ஊழலுடன் சம்பந்தப்படுபவர்களுக்கு அவர்களது தராதரங்களை பொருட்படுத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் பின்னிற்க மாட்டேன்.

அரசாங்கம், அமைச்சு மற்றும் அரச துறையின் ஊடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதன் முன்னேற்ற நிலைமைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும். ஏதேனும் ஒரு அமைச்சு அந்த இலக்குகளை அடைவதில் பின்னிற்குமாயின், அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நான் ஒருபோதும் பின்னிற்க மாட்டேன்.

தற்கால அரசியல் கலாசாரத்தில் பெரும்பாலும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களிடம் செல்வதை விட்டுவிடுகின்றனர் என்பது அண்மைக் காலத்தில் நான் நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் மக்கள் முன்வைத்த மனக்குறைகளில் இருந்து தெரியவந்தது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மக்களிடம் சென்று அவர்களது உண்மையான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### அரசமைப்புத் திருத்தமும் மாற்றமும்

ஒரு ஜனநாயக நாட்டின் வெற்றிக்கு அதன் அரசமைப்பே அடிப்படையாகும். 1978 முதல் 19 முறை திருத்தப்பட்டுள்ள எமது அரசமைப்பில் உள்ள உறுதியற்ற தன்மை, சிக்கல்கள் காரணமாக தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அரசமைப்பில் மாற்றத்தை செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்கு தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்போம். இதன்போது இந்நாட்டின் அனைத்து மக்கள் சம்பந்தமாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத, தீவிரவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ச்சியாக அடிபணியும், நிலைவற்ற நாடாளுமன்றம் ஒரு நாட்டுக்கு பொருத்தமானதல்ல. புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் போது தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாகும். விகிதாசார தேர்தல் முறைமையில் உள்ள சாதகமான பண்புகளை பாதுகாக்கும் அதேநேரம் நாடாளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையையும் மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்யும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

### எனது நாட்டை நேசிக்கின்றேன்

நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாடு குறித்து பெருமையடைகிறேன். எனக்கு எனது நாடு பற்றிய ஒரு தொலைநோக்குள்ளது. எமது நோக்கம் வினைத்திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கப் பண்பாடான சமூகத்தைக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதாகும். இதுவரை நாம் மேற் கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் போன்று, இதன் பின்னரும் செயற்படுவதற்காக எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயாகும்.

நாம் வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வந்தடைந்துள்ளோம். மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு பெரும் மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். ஏந்தவொரு சக்திக்கும் அடிபணியாது இந்த நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்கான பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்கால தலைமுறைக்காக தற்கால தலைமுறை அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

இது எம் அனைவரினதும் தாய்நாடு. எனவே இனம் மதம் கட்சி பேதமின்றி நாம் அனைவரும் நாட்டுக்காக ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது. மக்களுக்கு நாம் உறுதியளித்த சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக என்னுடன் ஒன்றிணையுமாறு நான் உங்கள் அனைவருக்கும் நட்புக் கரம் நீட்டி அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

# ரணிலுக்காக நாடாளுமன்றில் கவலை தெரிவித்த அதாவுல்லா

அரசியல் அனுபவமும் சிரேஷ்டத்தன்மையும் கொண்ட ஐக்கிய தேசியகட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்றைய சபையில் இல்லை என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம் அதாவுல்லா சுட்டிக்காட்டினார்.

ஒன்பதாவது நாடாளுமன்றம் முதலாவது அமர்வுக்காகப்நேற்றுக் காலைகூடியவேளையில் கட்சி தலைவர்கள் உரையின்போதே அதாவுல்லா இதனை சுட்டிக்காட்டியிருந்தார்.

73 வருட கால அரசியல்வரலாற்றைக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சி சார்பில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் நேற்று இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்ற அமர்வில் பங்குபற்றவில்லை. அங்கு அதாவுல்லா மேலும் கூறியவை வருமாறு:-

பிரதமர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் மற்றும் பல சிரேஷ்ட அனுபவமிக்க தலைவர்கள் இன்று சபையில் உள்ளனர்.

அது மகிழ்ச்சியளித்தாலும் கூட ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவர் ரணில் விக்ரமசிங்க சபையில் இல்லை.

இந்த நாட்டிற்கு புதிய அரசமைப்பொன்று வேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

நாட்டில் இன, மத முரண்பாடுகள் இல்லாது சகல மக்களின் உரிமைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் அரசமைப்பொன்றை உருவாக்கிக்கொள்ள இந்த நாடாளுமன்றத்தை அரசமைப்பு சபையாக மாற்றியமைத்து விரைவில் நாட்டிற்கு ஏற்ற நல்லதொரு அரசமைப்பை முன்வைக்க வேண்டும். - என்றார்.

# ஐ.தே.கவின் தலைமைப் பிரச்சினை தீரும் வரை எம்.பி. முடிவும் இல்லை!

## இப்படித் தீர்மானித்துள்ளாராம் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமை தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படும் வரை தேசிய பட்டியல் எம்.பியை நியமிக்க முடியாது என கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினரான ஜோன் அமரதுங்க இந்தத் தகவலை ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

புதிய தலைவர் தெரிவாகும் வரை தேசிய பட்டியல் எம்.பி. நியமனம் தாமதமாகும் என அவர் மேலும் கூறுகிறார்.

தற்போது நான் தேசியப் பட்டியலில் முன்னணியில் உள்ளேன், அதே போல் மூத்த உறுப்பினராகவும் இருக்கிறேன்.

தேசிய பட்டியல் இடத்திற்கு பொருத்தமான நபர் என்றாலும், கட்சி எடுக்கும் முடிவுக்கு தாம் கட்டுப்படுகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சித்தாண்டி சந்தணமடுவில் யானை தாக்கி ஒருவர் சாவு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி சந்தணமடு ஆற்றுப்பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை காட்டு யானையின் தாக்குதலில் பொன்னுத்துரை வசந்தகுமார் (வயது - 52) என்பவர் உயிரிழந்துள்ளார். குகதாசன் (வயது - 35) என்பவர் படுகாயம் அடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் தனது வீட்டிலிருந்து சந்தணமடு ஆற்றுப் பகுதிக்குத் தமது கால்நடைகளைப் பார்வையிடுவதற்காக காலை 5.00 மணியளவில் தனது நண்பருடன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அங்கு காட்டுயானைகள் பல வருவதை அவர்கள் அவதானித்துள்ளார்கள். யானைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஒதுங்கியிருந்த போது பின்னால் வந்த யானை ஒன்று இருவரையும் தாக்க முற்பட்டது.

இதனை அவதானித்த இருவரும் யானையிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடமுற்பட்டபோது பின் தொடர்ந்த காட்டு யானை பொன்னுத்துரை வசந்தகுமார் (வயது - 52) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையைப் பலமாகத் தாக்கியது.

பின்னர் தாக்கப்பட்ட நபரை அயலவர்களின் உதவியுடன் ஒருவாறு மீட்டு மாவடிவேம்பு வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் பின்னர் சிகிச்சை பலனற்றி அவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் குகதாசன் (வயது - 35) என்பவரும் படுகாயமடைந்துள்ளார்.

ஏறாவூர் நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எச்.ஏ.ஹக்கீம் பிரேதத்தைப் பார்வையிட்ட பின்னர் அதனை பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி உத்தரவிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களுக்குச் சேவை செய்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் தரவேண்டும்

## பிள்ளையான் சபையில் கோரிக்கை

கொழும்பு,ஓக.21

மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பத்தை புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பெற்றுத் தரவேண்டும் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் பங்கேற்பதற்கு மட்டக்களப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியதை அடுத்து பிள்ளையான் நேற்று முன்தினம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார்.

இதனையடுத்து, நேற்று நடந்த 9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் அவர் பங்கேற்றார்.

இதன்போது புதிய சபாநாயகராகப் பொறுப்பேற்ற மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு பிள்ளையான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தான் 5 வருடங்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார் எனத் தெரிவித்த அவர், மக்களுக்குச் சேவை யாற்றக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தருமாறு புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன விடம் கோரிக்கை விடுத்தார்.



தான் சிறையில் உள்ளமையால் நாடாளுமன்றத்துக்கு வரவேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்ற அனுமதி பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இதனால் மக்களுக்கு சேவை செய்ய முடியாதுள் ளதாகவும் அவர் கூறினார்.

# கொழும்புத்துறையில் வாள்வெட்டுச் சம்பவம் இளைஞர் ஒருவர் கைது

கொழும்புத்துறை பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்புத்துறை பகுதியில் இன்று மதியம் இனந்தெரியாத நபர்களால் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதில்படுகாயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(விவரமான செய்தி 10 ஆம் பக்கத்தில்)

# பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கிச் சூடு சிப்பாய் காயம்

களுத்துறை அளுத்கம பொலிஸ் நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது துப்பாக்கி தவறுதலாக இயங்கியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த சிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சஜித் அணியின் உறுப்பினர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல்!

கொழும்பு, ஓக 21

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினரான தர்ன பிரதீப் மீது கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தங்காலையில் உள்ள மாரக்கொல்லிய பகுதியில் நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக தங்காலை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி மூலம் போட்டியிட்ட தங்காலை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தர்ன பிரதீப் என்பவரே பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தங்காலையில் உள்ள மாரக்கொல்லிய பகுதியில் உறவினரின் திருமண விருந்தில் கலந்து கொண்டிருந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு மொரவெவவில் 2 வயோதிபர்கள் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை,மொரவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த இரண்டு வயோதிபர்களைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

12 வயது சிறுமி கடைக்குச் சென்ற போது பாலியல் தொந்தரவு கொடுத்தனர் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மொரவெவ பொலிஸார் 69 வயதுடைய கடை உரிமையாளரையும் 50 வயதுடைய நபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இருவரும் மஹதிவுல்வெவ – தெவனிபியவர பகுதியைச் சேர்ந்த கே. எம்.ஜினதாஸ (69வயது) மற்றும் ஏ. எச். ஏ. நிமால் ஜயவர்தன (50வயது) எனவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்றைய தினம் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மோ.சைக்கிளில் அதிவேகம் சிறுவனின் உயிரைப் பறித்தது



மட்டக்களப்பு - வாகனேரிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் 16 வயதான சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் என வாழைச்சேனை பொலிஸார் கூறியுள்ளனர்.

வாகனேரியைச் சேர்ந்த நா.ததுன் வயது (16) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இவர், வாகனேரிப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்ட தன் பின்னர் தமது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை மீறி பாதையை விட்டு விலகியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.விபத்து தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூ.1 லட்சத்து 60 ஆயிரம் கோடிக்கான

# இடைக்கால கணக்கறிக்கை மீது 27, 28 ஆம் திகதிகளில் விவாதம்

சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் கோடி ரூபாவுக்கான இடைக்காலக் கணக்கறிக்கையை புதிய நாடாளுமன்றம் அடுத்த வாரம் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் (27, 28 ஆம் திகதிகளில்) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவிருக்கின்றது.

இந்த வருடத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட செலவினங்களுக்கு நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறும் வகையில் இந்த இடைக்காலக் கணக்கு அறிக்கையை நிதி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கின்றார்.

அரச செலவுகள் உள்ளடங்கலான இடைக்கால கணக்கறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், இது தொடர்பான விவாதம் எதிர்வரும் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாகக் கூறினார்.

# சபையில் தூங்கியவர்கள்



கொழும்பு,ஓக.21

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, சமல் ராஜபக்ஷ ஆகியோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர் என்று செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

சமூக ஊடகங்களில் இது தொடர்பான படங்கள் பகிரப்பட்டு கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2020 இல் வெளியிடப்பெற்றது.